# கல்லூரி வரலாறு

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி

நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் 12.4.1884 இல் தஞ்சை மாவட்டத்தில், நடுக்காவிரி என்னும் சிற்றூரில் பிறந்தவர், தம் வாழ்நாளில் மிகச்சிறந்த தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர்,கல்லூரிகளில் சேர்ந்து பயிலாமல் தாமே பயின்ற தமிழ்ப் பேராசான். அந்தப் பெருந்தமிழ்ச் சான்றோர் தஞ்சை மாவட்டத்தில் கல்லூரிகள் இல்லாத குறையை உணர்ந்து, தம்முடைய முப்பத்தேழாம் அகவையில் கி.பி. 1921ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளிக்கு அருகே **திருவருள் கல்லூரி** என்னும் பெயரில் கல்லூரி ஒன்று நிறுவக் கருதி, அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

பகுத்தறிவுப் பகலவனாக விளங்கியவரும், தமிழ்நாட்டில் தன்மானப் பேரியக்கத்தைத் தோற்றுவித்த தனிப்பெரும் தலைவருமான **தந்தை பெரியார்** அவர்கள் திருவருள் கல்லூரி நிறுவ உருபா ஐம்பது நன்கொடை தந்துள்ளார்கள் என்பது வரலாற்றில் குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஆயினும், அப்போது கி.பி. 1921 ஆம் ஆண்டில் திருவருள் கல்லூரி நிறுவும் முயற்சி வெற்றிபெறவில்லை. பின்னர்க் கி.பி.1984இல் தஞ்சையில் நாட்டாரையா நூற்றாண்டு விழா நடைபெற்ற போதும் திருவருள் கல்லூரி நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. அந்த இரண்டாம் முயற்சியும் வெற்றிபெறவில்லை.

இப்போது நாட்டாரையா அவர்கள் நிறுவ விரும்பிய திருவருள் கல்லூரி என்னும் பெயருடன், நாட்டாரையா அவர்கள் பெயரும் நின்று நிலவ வேண்டும் என்னும் விருப்பத்துடன் **'நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி'** என்னும் பெயரில் புலவர் கல்லூரி நிறுவப்பெற்றுள்ளது. 14.10.1992 இல் இக்கல்லூரி தொடங்கப்பெற்றது.

தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் 1975, 76 ஆம் ஆண்டுகளில் புலவர் பட்டயப் படிப்புக்கு மாற்றாகப் பி.லிட் என்னும் பட்டப் படிப்புக் கொண்டு வரப்பெற்றது. அதனால், புலவர் கல்லூரிகள் கலைக் கல்லூரிகளாக வளர்ந்தன. ஆசிரியர்களும் கலைக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நிகராக ஊதியம் பெற்றனர்; மாணாக்கர்களும் பெரும்பயன் பெற்றனர். ஆனாலும், தமிழின் தனித்தன்மை குன்றிவிட்டது. மாணாக்கரின் தமிழ்ப் புலமை மிகவும் குறைந்து விட்டது என்னும் வருந்தத் தக்க புதிய நிலை

தோன்றியுள்ளது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, மீண்டும் தமிழில் புலவர் பட்டயப் படிப்பைக் கொண்டு வருவதற்கு நாங்கள் விரும்பினோம். இதற்குப் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இசைவு வழங்கியுள்ளது.

புலவர் வகுப்பு 1992 ஆம் ஆண்டு முதல், தஞ்சாவூர் நகரில், அருளானந்தம்மாள் நகரில் வாடகைக் கட்டிடத்தில் தொடங்கப்பட்டது. கல்லூரியின் முதல் முதல்வராக, பூண்டி கல்லூரியின் ஓய்வுப் பெற்ற பேராசிரியர் முனைவர் க.இராமையன் அவர்கள் செயல்பட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் இரா.சின்னதம்பி, பூண்டி கல்லூரியின் ஓய்வுப்பெற்ற பேராசிரியர் முனைவர் அ.தெட்சிணாமூர்த்தி, பூண்டி கல்லூரி பேராசிரியர் முனைவர் பெ.சுப்பிரமணியன் ஆகியோர் மதிப்பியல் பேராசிரியர்களாக ஊதியம் எதுவும் பெறமால் மாணவர்களுக்குத் தமிழ்மொழியைப் பயிற்றுவித்தனர்.

**தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு**

தமிழ்ப்புலவர் பயின்றோர் தமிழாசிரியர் பயிற்சி பெறுவது கட்டாயம். எம் கல்லூரியில் புலவர் பயின்றோர், சென்னை சைதாப்பேட்டை அரசு கல்வியில் கல்லூரி, சென்னை வெலிங்டன் சீமாட்டி கல்வியியல் கல்லூரி ஆகிய நிறுவனங்களில் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பில் பயின்று வந்தனர். ஆனால் திடீரென்று தமிழக அரசு மேற்கண்ட இரு நிறுவனங்களில் நடத்தப்பட்டு வந்த தமிழாசிரியர் பயிற்சி வகுப்பை நிறுத்திவிட்டனர். இதனால் நாட்டார் கல்லூரியில் பயின்ற புலவர் மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். இதனை சரிசெய்யும் பொருட்டு, கல்லூரியின் நிறுவனர் பேராசிரியர் பி.விருத்தாசலம் அவர்கள் தமிழ்நாட்டின் கல்வியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். பேராசிரியர் அவர்களிடம் கல்லூரி நிறுவனர் மிகுந்த மதிப்பு கொண்டவர். அதனால் உடனடியாக பலன் கிடைத்த்து. அன்றைய கல்லூரிக் கல்வி இயக்குநரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர், பேராசிரியர் விருத்தாசலம் எனக்கு வேண்டியவர். அவர் சொல்வதை செய்து கொடுக்கவும் என்று கூறினார். தமிழ்ப்புலவர் வகுப்பு நடத்தப்படும் தஞ்சைக்கு அருகிலுள்ள ஒரத்தநாடு

கல்வியியல் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு நடத்துவதற்கு அனுமதி வழங்கினார்கள்.

தமிழ்ப்புலவர் வகுப்பில் எம் கல்லூரியில் 60 மாணவர்கள் படித்து வந்தனர். எனவே ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் புலவர் படித்த மாணவர்களுக்கு 60 இடங்களும் பி.லிட் மற்றும் பி.ஏ. படித்த மாணவர்களுக்கு 40 இடங்களும் ஒதுக்கப்பட்டன. பிற்காலத்தில் எம் கல்லூரியில் புலவர் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை 80 மேல் தாண்டியது. இதனால் ஒவ்வோர் ஆண்டும் 20 புலவர் மாணவர்களுக்கு தமிழாசிரியர் பயிற்சி வகுப்பில் இடம் கிடைக்காமல் போனது. இக்கல்லூரியில் புலவர் பயிற்சி வகுப்பில் சேருவதற்கு 1000 க்கும் அதிகமானோர் விண்ணப்பம் செய்வர். ஆனால் 100 மாணாக்கருக்கு மட்டுமே இடம் கிடைக்கும் நிலை இருந்தது.

**பெரியார் பல்கலைக்கழக தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு**

கல்லூரி நிறுவனர் பேராசிரியர் பி.விருத்தாசலம் அவர்களின் மாணவர் முனைவர் மோ.தமிழ்மாறன் அவர்கள் சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் பேராசிரியராக பணியாற்றி வந்தார். கூடுதல் பொறுப்பாக தொலைநிலைக் கல்வியின் துணை இயக்குநராக பணியாற்றினார். அவரின் ஒத்துழைப்போடு, பெரியார் பல்கலைக் கழகத்தின் புறவளாகத் திட்டத்தின் கீழ் எம் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு 01.02.2006 முதல் தொடங்கப்பட்டது. ஆண்டுக்கு இரண்டு முறை இப்பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. ஓர் ஆண்டில் 200 மாணாக்கர் பயின்றனர்.

**அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக தமிழாசிரியர் பயிற்சி வகுப்பு**

பொதுவுடமை இயக்கத்தின் தமிழகத் தலைவர்களில் ஒருவரான தா.பாண்டியன் அவர்களின் உறவினரும், தஞ்சாவூர் பெண்கள் கிறித்தவ பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய திருமதி பியுலா ஜெயசீலி அவர்கள் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநராகப் பணியாற்றினார். அவர்களின் ஒத்துழைப்போடு, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் இணைவு பெற்று தமிழாசிரியர் பயிற்சி

வகுப்பு 01.8.2006 நாள் முதல் கல்லூரியில் தொடங்கப்பட்டது. இதில் மாணவியர் மிகுதியாக விண்ணப்பம் செய்ததால் இரண்டு பிரிவுகள் ஒரே நேரத்தில் தொடங்கப்பட்டன. இப்பயிற்சி வகுப்பும் ஆண்டுக்கு இரண்டு முறை நடத்தப்பட்டது. பெரியார் பல்கலைக்கழகம், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக் கழகங்கள் மூலம் ஆண்டுக்கு 600 மாணாக்கர்கள் எம் கல்லூரியில் தமிழாசிரியர் பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெற்றனர்.

**கலை அறிவியல் கல்லூரி**

தமிழ்ப்புலவர் படிக்கும் மாணவர்கள் தமிழாசிரியர் பயிற்சி முடித்து பத்தாம் வகுப்பு வரை முதல்நிலைத் தமிழாசிரியராகப் பணியாற்றலாம் என்ற அரசு விதிமுறை இருந்தாலும் அறியாமையில் சில மாணவர்கள் தங்களால் பி.எட் படிப்பு படிக்க முடியவில்லை என்றும் இதனால் தங்கள் வாழ்க்கை பாழாய் போய்விட்டது என்று கல்லூரி நிறுவனரிடம் குறைபட்டனர். இதனால் புலவர் படிப்பை பட்டப்படிப்பு நிலைக்கு தரம் உயர்த்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதற்கானப் பணிகள் தொடங்கப்பட்டன. கல்லூரிக்கு தமிழக அரசிடம் அனுமதி பெறுவது என்பது அவ்வளவு எளிதான காரியம் அன்று. மிகுந்த பணம் இருந்தால் மட்டுமே புதிய கல்லூரி தொடங்குவதற்கு அனுமதி கிடைக்கும்.

**கணேசன் இ.ஆ.ப.**

தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறைச் செயலாளராக கணேசன் இ.ஆ.ப. அவர்கள் பணியாற்றி வந்தார். அன்னார் ஒரத்தநாடு பகுதியைச் சார்ந்தவர். கல்லூரி நிறுவனருக்கு நன்கு அறிமுகமானவர். அவரிடம் கல்லூரியின் நிலை எடுத்துரைக்கப் பட்டது. தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி செலவில்லாமல் கல்லூரிக்கு அனுமதி கிடைக்கும் என்றால் விண்ணப்பம் செய்கிறோம். எங்களால் பணம் செலவழிக்க இயலாது என்று நிறுவனர் கூறினார். அதன்படி எந்தவொரு செலவும் இல்லாமல் அன்றைய கல்வியமைச்சர் மாண்புமிகு பொன்முடி அவர்களிடம் கல்லூரியின் நிலையினை எடுத்துக்கூறி, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் கல்லூரியை பட்டப்படிப்பு படிக்கும் கல்லூரியாக தரம் உயர்த்தி அரசாணையை பெற்றுத்

தந்தார். இதனால் புலவர் படிப்போடு இளம் வணிகவியல் (பி.காம்), இளம் வணிகமேலாண்மையியல் (பி.பி.ஏ.), இளம் கணினி பயன்பாட்டியல் (பி.சி.ஏ.), இளநிலை ஆங்கில இலக்கியம் ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளோடு 2010 ஆம் ஆண்டில் புதிய தொடக்கம் நடைபெற்றது. ஆனாலும் அனுமதி கிடைப்பதற்கு ஆகஸ்டு மாதத்திற்கு மேல் ஆனதால் புதிய பாடப்பிரிவுகள் 2011 ஆம் ஆண்டே தொடங்கப் பட்டது.

**கல்லூரி நிறுவனரின் மறைவு**

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் 1925 ஆம் ஆண்டு திருவருள் கல்லூரி என்னும் பெயரில் தனித்தமிழ் கல்லூரி தொடங்கப்படவேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டார். ஆனால் 1992 ஆம் ஆண்டு பேராசிரியர் பி.விருத்தாசலம் அவர்கள் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி என்னும் தமிழ்ப்புலவர் கல்லூரியை சான்றோர்கள் துணையுடன் தொடங்கினார். தமிழ்ப்புலவர் படித்த மாணவர்கள் சிலரின் அறியாமையால், தங்கள் வாழ்வு பாழாய் போய்விட்டது என்று கூறிய பழிச்சொல் அவரின் உள்ளத்தில் ஆழமான வடுவை உண்டாக்கியது. அதனால் புலவர் கல்லூரி கலைஅறிவியல் பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கும் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது என்றாலும் புலவர் கல்லூரி என்னும் தனித்தன்மை போய்விட்டது என்று வருந்தினார். கலை அறிவியல் பாடப்பிரிவுகள் இக்கல்லூரியில் நடத்தப்படுவதற்கு முன்பாக 17.11.2010 ஆம் நாள் இயற்கை அடைந்தார்.

கலை அறிவியல் பாடப்பிரிவுகள்

1992 ஆம் ஆண்டுமுதல் நடைபெற்றுவந்த புலவர் பாடப்பிரிவோடு, இளம் வணிகவியல் (பி.காம்), இளம் வணிகமேலாண்மையியல் (பி.பி.ஏ.), இளம் கணினி பயன்பாட்டியல் (பி.சி.ஏ.), இளநிலை ஆங்கில இலக்கியம் ஆகிய பாடப்பிரிவுகள் புதிதாக சேர்க்கப்பட்டு ஐந்து பாடப்பிரிவுகளோடு தற்போது கல்லூரி இயங்கி வருகிறது.